අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/02/29/18/01/01 (VII වෙළුම) ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2022.10. 12

சுற்றறிக்கை இலக்கம்: 21/2020 (I)

சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்.

**<u>ஆசிரியர் ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்தல்</u>**

இலக்கம் 2182/36 இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் எனது 21/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் படி 2020.07.01 ஆம் திகதி முதல் ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ள மற்றும் அதன் பிரகாரம் உள்ளீர்ப்புச் செய்வதறக்கு இணக்கம் தெரிவித்து விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களையும்இலக்கம் 2300/09 மற்றும் 2022.10.04 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஆசிரிய ஆலோசகர் சேவை பிரமாணக் குறிப்பின் திருத்தங்களுக்கமைய பின்வருமாறு ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்படும்.

02. இந்த திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகள் 2020.07.01 ஆம் திகதிக்கு ஆசிரியர் ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள மற்றும் உள்ளீர்ப்புச் செய்வதற்கு இணக்கம் தெரிவித்து விண்ணப்பங்களை முன்வைத்த 2022.01.02 திகதியில் சேவையிலுள்ள சகல ஆசிரிய ஆலோசகர்கள் தொடர்பானதாகும்.

I. **<u>உள்ளீர்ப்பு தொடர்பான கடிதங்கள் கிடைக்கப்பெற்ற ஆசிரிய ஆலோசகர்கள்.</u>**

(அ) தற்போது ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள 2022.01.02 ஆம் திகதிக்கு சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து ஆசிரிய ஆலோசகர்களின் உள்ளீர்ப்புக் கடிதங்கள் ரத்துச்செய்யப்படுவதுடன் அவ்வுத்தியோகத்தர்களை 2022.01.02 ஆம் திகதிமுதல் அமுலுக்கு வரும் வகையில் ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) அதன் பிரகாரம் உள்ளீர்ப்புக் கடிதங்கள் ரத்துச்செய்யப்பட்டு புதிதாக உள்ளீர்ப்புக் கடிதங்கள் எதிர்வரும் காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

II. **உள்ளீர்ப்புக் கடிதங்கள் கிடைக்கப்பெறாத ஆசிரிய ஆலோசகர்கள் ஆசிரிய ஆலோசகர்**

(அ). ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யவதற்கு இணக்கம் தெரிவித்து இதுவரையில் ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யும் கடிதங்கள் கிடைக்கப்பெறாத ஆசிரிய ஆலோசகர்கள் இருப்பார்கள் எனில் அந்த உத்தியோகத்தர்களை 2022.01.02 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) அதன் பிரகாரம் உள்ளீர்ப்புக் கடிதங்கள் எதிர்வரும் காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

III. <u>இந்த ஒழுங்குவிதிகளின் படி உள்ளீர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்களின் 2022.01.02 ஆம் திகதி வரையிலான சேவைக் காலங்கள்</u>

(அ) 2020.07.01 ஆம் திகதி முதல் ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு இணக்கம் தெரிவித்த, 2022.01.02 ஆம் திகதிக்கு சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து உத்தியோகத்தர்கள் தொடர்பாக 2022.01.02 ஆம் திகதி வரை அந்த உத்தியோகத்தர்களுக்குரிய முந்தைய சேவை பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

IV. **ஆசிரிய ஆலோசகர் சேவையில் 2022.01.02 ஆம் திகதிக்கு முன்னதாக ஓய்வுபெற்றுள்ள ஆசிரிய ஆலோசகர்கள்**

(அ) 2020.01.02 ஆம் திகதிக்கு முன்னதாக ஓய்வு பெற்ற, ஆசிரிய ஆலோசர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் உள்ளீர்க்கப்படும் திகதி 2020.07.01 ஆம் திகதி என மேலும் கருத்தப்படும்.

V. **இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் படி ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்படும் திகதியில் திருத்தங்களை மேற்கொள்ளுதல்**

(அ) 2022.01.02 ஆம் திகதியில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவதற்கு இணக்கம் தெரிவித்த உத்தியோகத்தர் ஒருவருக்கு தமது விருப்பின் பேரில் மேலும் இல்ங்கை ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்க்கப்படும் திகதி 2020.07.01 ஆக கருதுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். அவ்வாறான தேவையைக் கொண்ட உத்தியோகத்தர் ஒருவர் அது தொடர்பான கோரிக்கை ஒன்றை சத்திய பிரமாணத்துடன் வலய கல்விப் பணிப்பாளர் ஊடாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்ட திகதி முதல் 03 மாதங்களுக்குள் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

03. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் படி ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்படும் திகதி மாத்திரம் திருத்தப்படுவதுடன், 21.'.2020 ஆம் இலக்கத்தைக் கொண்ட எனது சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் மாற்றமின்றி நடைமுறைப்படுத்தப்படும்

04. இந்த சுற்றறிக்கையின் மூலமாக தழுவப்படாத விடயங்கள் தொடர்பான முடிவுகளை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியினை பெற்றுக்கொண்ட பின்னர் என்னால் நடைமுறைப்படுத்தப்படும்.

05. சிங்கள, தமிழ், மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதேனும் பொருத்தப்பாடு நிலவுமெனில் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழிமூல சுற்றறிக்கை சரியானதென கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

எம்.என். ரணசிங்க
செயலாளர்
கல்வி அமைச்சு